செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 334 நாள் : 8/6/17

India Post

**இந்திய அஞ்சல் துறை,**

**அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகம்,**
**வேலூர் கோட்டம், வேலூர் – 632 001.**

1. அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகம், வேலூர் கோட்டம் அஞ்சல் ஆயுள் காப்பீட்டு/கிராமிய அஞ்சல் ஆயுள் காப்பீட்டு விற்பனைக்கான முகவர் பணியமர்த்த/ அதற்கான பட்டியலமைக்க "நேர்காணல்" நடத்த இருக்கிறது. விருப்பமுள்ளவர்கள் கீழ்காணும் தகுதியை பெற்றிருப்பின் "அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் அலுவலகம், வேலூர் கோட்டம், அலுவலகத்தில் 13.06.2017 அன்று 1100 மணியளவில் நடைபெறவுள்ள நேர்காணலில் கலந்து கொள்ளலாம்

நேர்காணலில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் பயோ டேட்டா (விண்ணப்பபடிவம் இணைக்கப்பட்டுள்ளது),வயது சான்று / தேவையான கல்வித் தகுதி மற்றும் அனுபவ சான்றிதழ்களை உடன் எடுத்துவரவேண்டும்.

## தேவையான தகுதிகள்:

அ) தகுதி : மக்கள் தொகை 5000க்கு குறைவான பகுதியில் வசிப்பின் 10ம் வகுப்பில் தேர்ச்சி/ மக்கள் தொகை 5000க்கு அதிகமான பகுதியில் வசிப்பின் 12ம் வகுப்பில் தேர்ச்சி

ஆ) வயது : 18 லிருந்து 65 வரை

இ தரப்பிரிவு: வேலையில்லா, சுயதொழில் புரியும் இளைஞர்கள், ஏதேனும் காப்பீட்டு குழுமத்தின் முன்னாள் காப்பீட்டு ஆலோசகர்கள், முகவர்கள், அங்கன்வாடி மற்றும் மகிளா மண்டல் பணியாளர்கள், சுய உதவிக்குழுக்கள், முன்னாள் இராணுவத்தினர் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் அல்லது மேற்கணட தரப்பிரிவு உள்ள எவரும் விண்ணப்பிக்கலாம்.

ஈ) வரவேற்கத்தக்க தகுதிகள்: காப்பீட்டு விற்பனையில் முன் அனுபவம் உள்ளவர்கள் கணினிப் பயிற்சி உள்ளவர்கள்/ சொந்தப்பகுதி பற்றி நன்கு அறிந்தவர்கள்.

/கே. விஜயா/
அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர்,
வேலூர் கோட்டம், வேலூர் – 632 001.

8/6/17
செ.ம.தொ.அ.
வேலூர் – 9.